
# திராவிடத்தால் வாழ்கிறோம்

982

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## மாநாடு

ர.பிரகாசு

84

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

ஓவியம் : சிகரன்




# கூடிக் கலையும் கூட்டமல்ல!

மாணவர்கள் அரசியலில் ஈடுபடலாமா, வேண்டாமா என்பது எல்லா காலத்திலும் இருக்கும் விவாதம். ஆனால், மாணவர்கள் எப்படிப்பட்ட அரசியல் பண்போடு வளர வேண்டும் என்ற விழிப்புணர்வைப் பெற வேண்டிய காலம் இது. 60 ஆண்டுகளுக்கு முன்பே, அத்தகைய விழிப்புணர்வைத் தந்த இயக்கம் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்.

29.11.1959-இல் திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநாடு மதுரையில் நடைபெற்றது. மதுரை, நெல்லை, இராமநாதபுரம், குமரி உள்ளிட்ட தென் மாவட்டங்கள் அனைத்திலும் இருந்து மாணவர்கள் தன்னெழுச்சியுடன் மாநாட்டில் பங்கேற்றனர். மாநாட்டைத் திறந்துவைத்த பி.எஸ்.மணியம் அவர்கள், இந்தி ஆதிக்கத்தின் பல்வேறு வடிவங்களை எடுத்துக்காட்டி, அதனால் விளையக்கூடும் பேராபத்துகளில் இருந்து தமிழ்நாட்டை எவ்வாறு காப்பது என எடுத்துரைத்தார். கு.இந்திரசித் வரவேற்புரை ஆற்றினார்.

திராவிட நாடு விடுதலைக் கோரிக்கையை தி.மு.க. உயர்த்திப் பிடித்த காலம் அது. அப்போது ‘தி இந்து’ இதழில் கட்டுரை எழுதிய, அன்றைய விந்தியப் பிரதேச மாநிலத்தின் ஆளுநராக இருந்த சந்தானம், ‘நாட்டு விடுதலைக்கான முயற்சி தற்கொலைக்கு ஒப்பானது. டில்லி நம்மைச் சுரண்டவில்லை. பேதம் காட்டிப் பேசுவது என்பது, நமது புனைந்துரை’ என கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். மாநாட்டிற்குத் தலைமை வகித்த கே.ஏ.கிருஷ்ணசாமி, சந்தானத்தின் கட்டுரைக்குப் பதிலளித்தார். “ஒவ்வொரு நாட்டு விடுதலை இயக்கமும் அரசியல் விடுதலையைத்தான் முதன்மையாகக் கொண்டு கிளர்ச்சிகளை நடத்தி இருக்கின்றன. இத்தாலிக்கு மாஜினி தலைப்பினை நல்கியது போல, நமது தலைவர் அறிஞர் அண்ணா திராவிட நாடு தலைப்போருக்கான தலைப்பினைத் தந்திருக்கிறார். அண்ணா அவர்களை நமது தலைவராகப் பெற்றிருப்பது நமது தலைமுறையினர் பெற்ற தனிப்பேறு” என்றார்.

சிறப்புரையாற்றிய திராவிட மாணவர் முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் எஸ்.டி.சோமசுந்தரம், “மாணவர் மாநாடு கூடிக் கலையும் கும்பாபிஷேகம் அல்ல. கும்பாபிஷேகம் முடிந்தவுடன் சிலை இருட்டறையில் தள்ளப்படும். மாணவர் மாநாடு ஆயுதச்சாலையில் உள்ள ஆயுதங்களை, உலைக்கூடங்களுக்கு கொண்டுவந்து துரு நீக்கப்பட்டு, வளை நீக்கப்படுவதைப் போல மாணவர்கள் அச்சத்தை நீக்கி, அயர்வைப் போக்கி ஆற்றலை மேலும் பெருக்கிக்கொள்ளும் இடமாகும்” என்றார். அந்த அளவுக்கு கருத்தாமிழக்க உரைகள் நிகழ்த்தப் பட்டன. இடைவெளி இல்லாமல், காலை முதல் இரவு வரை மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடர்ந்தன.

* மாநிலம் முழுவதும் உள்ள மாணவர் விடுதிகளின் குறைபாடுகளைச் சரிசெய்ய வேண்டும்

* சிறப்புத் தமிழ் எடுத்துப் பயிலும் மாணவர்களுக்கு அரசுத்துறையில் முன்னுரிமை தரும் வகையில், தேர்வு முறையை மாற்ற வேண்டும்.

* சென்னைப் பல்கலைக்கழகத்தில் பி.ஏ.ஹானர்ஸ், எம்.ஏ. பட்டதாரிகளுக்கு ஆராய்ச்சி படிக்க அனுமதிப்பதைப் போல அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் அனுமதிக்க வேண்டும்

என கல்வி சார்ந்து முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மதுரை நகரிலும் வெளியிடங்களிலும் நகர்மன்ற அலுவலகப் பெயர்கள், தெருப்பெயர்கள், கடைகளின் முகவரிகளை இனி தூய தமிழில் எழுத வேண்டுமென்ற பொது வேண்டுகோளையும் தீர்மானமாக முன்வைத்தனர்.

மாணவர்கள் ஏந்த வேண்டிய சரியான அரசியல் எது என்பதைக் கற்பித்த இயக்கம் தி.மு.கழகம்.

...கூட்டம் திரளும்

## செயல்திறன் மிக்க அரசு!



**ம**த்திய பிரதேசத்தில் இருமல் சிரப் உட்கொண்டதால், 10 குழந்தைகள் உயிரிழந்ததாகப் புகார் எழுந்தது. காஞ்சிபுரத்தில் உள்ள ஸ்ரேசன் பார்மா நிறுவனம் தயாரித்த மருந்து அது என்றும், அதுகுறித்து பரிசோதனை செய்து தருமாறு, அக்டோபர் 1-ஆம் தேதி தமிழ்நாடு அரசுக்கு தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு எவ்வளவு துரிதமாகச் செயல்பட்டு, குழந்தைகளின் பாதுகாப்பில் அக்கறை செலுத்தியுள்ளது என்பது பற்றி ராஜேஷ் தேவதாஸ் என்பவர் எழுதிய பதிவிலிருந்து...

“அக்டோபர் 1 விடுமுறை நாள். அன்று நண்பகலில் ஆய்வாளர்கள் குழு அந்தத் தொழிற்சாலைக்குச் சென்று விரிவாக ஆய்வு மேற்கொள்கிறது. ஆய்வகத்தில் 39 கடுமையான மற்றும் 325 முக்கியமான நடைமுறை விதிமீறல்களைக் கண்டறிந்தனர். ஆலையில் இருந்த மீதமுள்ள இருப்புகளை விநியோகிக்காதவாறு முடக்கினர். எடுக்கப்பட்ட மாதிரிகளை, சென்னை அரசு ஆய்வகத்துக்கு அனுப்பி வைத்தனர். அடுத்த 24 மணி நேரத்துக்குள் COLDRIF சிரப் தரமற்றது என அறிவித்தனர். பெயிண்ட் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் கரைபொருள் இந்த சிரப்பில் கலந்திருப்பது உறுதி செய்யப்பட்டு, தடை விதித்தது தமிழ்நாடு அரசு. சில்லறை விற்பனையில் இருப்பில் உள்ள இந்த சிரப்பை முடக்கச் செய்தது. ஆய்வு முடிவுகள் கிடைத்த 24 மணி நேரத்துக்குள் இவை அனைத்தும் நடந்துவிட்டன.

அக்டோபர் 3-ஆம் தேதி, அந்நிறுவனத்தின் உரிமத்தை ரத்து செய்ய SHOW CAUSE நோட்டீஸ் வழங்கப்பட்டது. ஆனால், தகவல் தந்த மத்திய பிரதேச மாநிலமோ ஆற அமர, மறுநாளான அக்டோபர் 4-ஆம் தேதி மாலை ‘தடை ஆணை’ பிறப்பித்துள்ளது. அதனால்தான் தமிழ்நாடு மற்ற மாநிலங்களை விட 100 மடங்கு சிறந்தது. தமிழ்நாட்டிடம் தேசத்துக்கு வழங்குவதற்கு உறுதியான ஒன்று, தனித்துவமான ஒன்று, வித்தியாசமான ஒன்று உள்ளது” எனப் பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### மறக்க முடியாத நிகழ்ச்சி!



முகமது அலி

2006-ஆம் ஆண்டு இன்றைய கழகத் தலைவருடன் படம் எடுத்துக்கொள்ள வாய்த்த அழகிய தருணம். நான் 30 ஆண்டுகள் வாலாஜாபாத் தெற்கு ஒன்றிய இளைஞர் அணித் துணை அமைப்பாளராகவும் மற்றும் சிறுபான்மை நலப் பிரிவுத் துணை அமைப்பாளராகவும் பணியாற்றினேன். இப்படத்தில் அன்றைய ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டக் கழகச் செயலாளராக இருந்த அண்ணன் தா.மோ.அன்பரசன், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினரும் எங்களின் இன்றைய மாவட்டச் செயலாளருமான க.சுந்தர், அன்றைய வாலாஜாபாத் ஒன்றிய கழகச் செயலாளர் அண்ணன் கிருஷ்ணராஜ், என் நண்பரும் இன்றைய காஞ்சிபுரம் தொகுதி மக்களவை உறுப்பினருமான அண்ணன் சிறுவேடல்.க.செல்வம் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் மறக்க முடியாத நிகழ்வாக இருந்தது.

**-முகமது அலி, துணை அமைப்பாளர், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, வாலாஜாபாத் தெற்கு ஒன்றியம், காஞ்சிபுரம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்


84

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# தொல் திராவிட எழுத்து!

ஹரப்பா-மொகஞ்சதாரோ தொல்லியல் ஆய்வின் மூலம் சிந்து வெளி பண்பாட்டை, ஜான் மார்ஷல் உலகுக்கு அறிவித்து நூறாண்டாகிறது. தொல் திராவிட பண்பாட்டுடன் சிந்துவெளிப் பண்பாடு கொண்டிருக்கும் நெருங்கிய தொடர்பை நிரூபிக்கும் முயற்சியில் பெரும்பங்காற்றிய அவரது பணிகளைப் போற்றி, எழும்பூரில் முழுஉருவச் சிலையையும் நிறுவியுள்ளது நம் திராவிட மாடல் அரசு.

மேலும், சிந்துவெளி எழுத்து முறையைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வழிவகை செய்வோருக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டாலர் பரிசாக வழங்கப்படும் என ஜனவரி மாதம் அறிவித்தார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அந்த முயற்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில், சிந்துவெளி எழுத்துரு பற்றிய அறிமுகத்தை வழங்கும் ‘Under standing the Script of Indus Valley Civilization’ நூல் அண்மையில் வெளியானது. ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகமும் சிந்து வெளி ஆய்வு மையமும் இணைந்து வெளியிட்ட இந்நூலை, நூலக இயக்குநர் சுந்தர் கணேசன் அவர்கள் எழுதியுள்ளார். வர்ஷா உயிர்மை, விளக்கபடங்களைத் தீட்டியுள்ளார்.




சிந்தனை, செயல், பொருள் போன்றவற்றை இன்னொருவருக்கு கடத்த பயன்படுத்தப் பட்ட சிந்துவெளி வரி வடிவங்கள், பொது ஆண்டுக்கு 3300 வருடம் முன்பிருந்து 1900 பொ.ஆ.மு வரை சிந்துவெளி தொல்லியல் ஆய்வில் கிடைத்தவை. இவற்றுள் மனிதர்கள், விலங்குகள், பறவைகள், எண்களை உணர்த்தும் குறிகள், கோடுகளால் ஆன குறிகள், முக்கோணத்தால் ஆன குறிகள்,

சிந்துவெளி எழுத்துகள் பற்றிய ஆய்வு நெடுங்காலமாகவே நடைபெற்று வருகிறது. மைக்கேல் விட்ஸல், அஸ்கோ பர்போலா, ஐராவதம் மகாதேவன், ஆர்.பாலகிருஷ்ணன் போன்ற பல சிந்துவெளி அறி‘ஞர்கள் இம்முயற்சியில் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பைச் செலுத்தியுள்ளனர். அத்தகைய ஆய்வுகள் மூலம் இதுவரை நமக்குக் கிடைத்த முடிவுகளை எளிமையாக அறிமுகம் செய்கிறது இந்நூல்.

சிந்துவெளியில் கிடைக்கப் பெற்ற முத்திரைகள் மற்றும் வரிவடிவங்கள் குறித்த அறிமுகத்துடன் தொடங்கும் இந்நூல், இடு குறிகள், சின்னங்கள் போன்றவை சிந்துவெளி நகர நாகரிகத்தில் எவ்வாறு பயன்படுத்தப்பட்டன என்பதை விளக்குகிறது.

> **ஒரு பண்பாட்டின் எழுத்துகள் சொல்ல முற்படும் பொருளை அறிய முயல்கிறோம் என்ற நிறைவை வழங்கும் இந்நூல் தவறவிடக்கூடாத ஒன்று.**

செவ்வக வடி விலான குறிகள், வளைவுகளால் ஆன குறிகள் ஆகியவை எதை உணர்த்துகின்றன எதை சொல்ல முற்படுகின்றன என்பதை, மிக எளிய நடையில் நமக்கு தெரிவிக்கிறது.

விலங்குகள், பறவைகள், இலைகள், மீன்கள், வடிவியல் மற்றும் மானுடவியல் கோலங்களால் ஆன சின்னங்கள் எதற்காக பயன்படுத்தப்பட்டன , எந்த சின்னங்கள் எல்லாம் அதிக இடங்களில் இடப்பெற்றுள்ளன, அவை சொல்ல முற்படும் அர்த்தங்கள் என்ன என்பவை பற்றிய அறிமுகக் குறிப்பும் இதில் இடப்பெற்றுள்ளது.

இந்நூலின் ஒவ்வொரு பக்கமும் நமக்கு சிந்துவெளி எழுத்துகள் மீதான ஆர்வத்தைத் தூண்டவே செய்கிறது. அந்த ஆர்வத்தைத் தீர்த்துக்கொள்ள *indusscript.in* என்று இதற்காகவே பிரத்யேகமாக உருவாக்கப்பட்டுள்ள வலைதளத்தையும் பயன்படுத்தலாம். திராவிட பண்பாட்டுடன் நெருங்கிய தொடர்புகொண்ட ஒரு பண்பாட்டின் எழுத்துகள் சொல்ல முற்படும் பொருளை அறிய முயல்கிறோம் என்ற நிறைவை வழங்கும் இந்நூல் தவறவிடக்கூடாத ஒன்று.

...வாசிப்போம்.

## நம் வரலாறு

### திருச்சியில் மக்கள் கடல்!

1990-ஆம் ஆண்டு, பிப்ரவரி 9 முதல் 11-ஆம் தேதி வரை 3 நாட்கள் திருச்சியில் கழகத்தின் 6-வது மாநில மாநாடு நடைபெற்றது. முதல் நாள், பிரமாண்ட பேரணியும் இரண்டாம் நாள் இளைஞர் அணியின் சமதர்ம சமுதாய மாநாடும், 11-ஆம் தேதி அரசியல் மாநாடும் நடைபெற்றன. திருச்சி நகர வரலாற்றில் அதுவரை கண்டிராத ஊர்வலம் என்றும் ‘மக்கள் கடல்’ என்றும் பத்திரிகைகள் எழுதின.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131